# ஆராதே என் மனம்.



ஆராதே என்மனம் உன்னைக்காணுவரை ,
ஆராமுதனே உனைக் குடந்தை நகரதிலே !
ஆராதே என்மனம்.....

பாராமுகனாய் நீயுமே அன்று இருந்து ,
பிருகுமுனி சினத்தினால் தாரமிழந்து ;
ஆராமுதன் என்ற பெயருடன் இன்று - இவ் ,
வுலகு உய்ய இத்தலம் வந்தனையோ !
ஆராதே என்மனம்......

கோமளவல்லியின் கரமதைப் பிடித்து ,
சார்ங்கமென்ற வில்லை கையிலேந்தி ;
பூமகளுடன் இங்கு சேர்ந்து இருந்து - பின் ,
சார்ங்கபாணியாக இன்று திகழ்பவனே !
ஆராதே என்மனம்......